
# காஞ்சி

நிறுவனர்

அண்ணாதுரை

3 3-68





ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

# நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்.

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது; நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவையெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப் பொருட்களுக்குத்தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை விஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியார் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

MB

**மெட்டல் பாக்ஸ்**

*பாதுகாப்பான பாக்கிங்*

MB/4102

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 3—3—68 இதழ் 32


# வரியில்லா பட்ஜெட் வாழ்க!

தமிழக அரசு, 1968—69க்கான நிதிநிலை அறிக்கையை மன்றத்தின் முன் வைத்துவிட்டது. கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு முழு ஆண்டுக்குப் பிறகு சமர்ப்பித்துள்ள முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காங்கிரசார் ஆளும் பொறுப்பேற்றிருந்த காலத்தில் வெளிவந்துள்ள எந்த ஒரு பட்ஜெட்டிலும் மறைமுகமாகவாவது வரி விதிக்கப்படாமல் இருந்ததில்லை. கழகம் தன் நிதிநிலை அறிக்கையில், எந்த வித புதிய வரியும் விதிக்கப்படாமல் தயாரித்துள்ளது பாராட்டுக்குரியதாகும்.

மாநில, மத்திய அரசின் மிக உயர்ந்த வரித் தொல்லையினுல் ஏற்கெனவே குமுறிக் கொண்டிருக்கும் சாதாரண நடுத்தர மக்களின் மன நிலையை நன்கு படம் பிடித்திருப்பதன் எதிரொலி, அறிக்கையில் நன்கு தெளிவாகிறது. அதனுலேயே புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

இலவசக் கல்வி அளிப்பது பற்றிய தனது கருத்தை ஏற்கெனவே கழக அரசு தெளிவாக்கி இருக்கிறது. அதற்கொப்ப, சில குறிப்பிட்ட வருவாய் வரம்பை அனுசரித்து, மேலும் சில பகுதிகளுக்கு விஸ்தரித்தும் இருக்கிறது.

ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்குவதில் கூட, நாட்டம் செலுத்தியுள்ள அரசு, அதனை நாடெங்கும் என்று அறிவித்திருந்தால் நன்ருக இருந்திருக்கக் கூடும் என்ருலும், நிதிநிலை அதற்கு இடமளிக்காததினுலேயே, தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்றே நம்புகிறேம். அனைவருக்கும் கிடைக்க விரைவில் வழி வகை காண தமிழக அரசு முயலக் கூடும் என்பது நம்பிக்கைக் குரியதுதான்.

வருவாய்க்குப் புதிய வழிவகைகள் காணப்படாத நிலையில், தேவைகளைப் பற்றி அடுக்கிக்கொண்டே போவது நல்லது அல்ல; ஆனுலும் உள்ளதைக் கொண்டு நல்லது செய்யும் போக்கை, அறிக்கை முற்றிலும் காண முடிகிறது.

கடந்த ஆண்டினைவிட, இந்த ஆண்டு கல்விக்கு மேலும் 6கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கி இருக்கிறது. விவசாயத்துறையிலும் தன் தீவிரத் தன்மையையும், அக்கறையும், ஆழ்ந்த நம்பிக்கையையும் காட்டி இருப்பது, விவசாயப் பெருங்குடியினரின் எதிர்காலத்தை ஒளிபெறச் செய்வதாகவே இருக்கக் கூடும் என்று மதிப்பிடலாம்.

தொழில் துறையில், தமிழக அரசு நாட்டம் செலுத்தவில்லை என்ற காங்கிரசின் பொய்க் குற்றச்சாட்டின் திரையைக் கிழிக்கும் வகையில், பிற மாநில நிலைகளோடு தமிழக நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி உரிய பதிலளித்து, வழி வகைகளையும் காட்டி இருப்பதனுலேதான் காங்கிரஸ் இதுபற்றி 'உப்புச் சப்பற்றது' என்று வருணித்திருக்கிறது போலும்!

பாவம், காங்கிரசார் துள்ளிக் குதிக்க முடியாத அளவுக்கு எல்லா தரப்பினரையும் திருப்திப்படுத்தத் தக்க வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டை, 'உப்புச் சப்பற்றது' என்று காங்கிரஸ் கருதுவதில் பொருளிருக்கக் கூடும்; காங்கிரசின் அரசியலை விலைபோகாமற் செய்யத்தக்கதுதானே இது!

'வரி விதிக்க இனி வகையில்லை—அதனுல் புதிய வரிகள் இல்லை' என்று யாரோ சில பொருளாதார மேதைகள் கூறி இருப்பதாக காங்கிரஸ் ஏடொன்று விமர்சித்திருக்கிறது. கடந்த காலத்தில் நாடாண்டவர்களின் போக்கையும் மத்திய அரசின் கொடுமையையும் விண்டுக் காட்டத்தக்க சான்ருகும் இது.

சுமார் 74 இலட்சம் ரூபாய் அளவுக்கு உபரி காட்டி வெளியிடப் பெற்றுள்ள அறிக்கை, ஏற்கெனவே திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள பல இனங்களின் மீது, ஒதுக்கீட்டை அதிகப்படுத்திக் காட்டி இருப்பது பாராட்டத்தக்கதல்லவென்ருல், எப்போதும், எதனையும் பாராட்டத் தெரியாதவர்கள் அவர்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

படியரிசித் திட்ட விஸ்தரிப்பு பற்றி ஏதும் அறிவிக்கப்பெறவில்லை என்ற காங்கிரசின் குற்றச்சாட்டு, அறிஞர் அண்ணு அவர்கள் விளக்குவதுபோல, கழக அரசை ஒரு பொருளாதார முடக்கத்துக்குத் தள்ளிவிட நினைப்பது என்பதுவே ஆகும். ஆனுலும், காலப்போக்கில் இது விஸ்தரிக்கப்படவே செய்யும் என்று ஏற்கெனவேயே அமைச்சர்கள் பலரும் அறிவித்திருப்பதை ஏற்க வேண்டுமானுல், காங்கிரசுக்கு அந்த அளவுக்குப்பெருந்தன்மை இருக்கவேண்டுமே!

மத்திய அரசின் பொது பட்ஜெட்டினுல், தமிழக மக்களின் அல்லல் அதிகப்படலாமேயொழிய, வேறு எந்தவகையிலும் குறை காண முடியாததாகும் இது.

மாநில அரசு, எவ்வளவுதான் சீரிய செவ்விய முறையில் செயல்பட்டாலும் அவற்றைத் தூள் தூளாக்கி விடக்கூடிய மத்திய அரசின் பிடி, மாநிலங்களில் புகுகின்ற வரையில் மக்கள் பயனடைய முடியாது என்ற வருத்தத்தையும் இந்த நேரத்தில் எடுத்துக்காட்டத்தான் வேண்டி இருக்கிறது.

மத்திய அரசின் கடன் இனங்களும், அதற்குரிய வட்டி இனங்களும் பற்றிய முதலமைச்சரின் குறிப்பு, உண்மையிலேயே கவலைக் குரியதாகும்.

இந்த வகையில், தன் ஆழ்ந்த நம்பிக்கையைக் தெரிவித்துள்ள தமிழக அரசுக்கு, நம்பிக்கை கொல்லும் செயலாக மத்திய அரசு மாருது என்று நம்புவோமாக!

●

# நரை

[புலவர்-ஆரிமதி தென்னகன்]

வரக்கூடாத ஆசைதான்; ஆனல் வந்து விட்டது; செய்யக் கூடாத செயல் என்றுதான் இவ்வளவு நாள் இருந்தார்; ஆனல், செய்தே விடுவது என்று உறுதியான முடிவுக்கு இன்று வந்து விட்டார்.

விசுவாமித்திரர் போன்ற முனிவர்களே வேல் விழியர்களின் விழி அசைவிற்குத் தங்கள் வீரத்தைப் பலியிட்டு விட்டார்கள் என்ருல் இந்த விநாயகமூர்த்தி எம்மாத்திரம்?

நண்பர்களும், உறவினர்களும் இன்னொரு திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லவும் இல்லை; நெருக்கவும் இல்லை. என்ருலும், மனைவி இறந்த ஓராண்டுக்குள்ளேயே மறுமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு விநாயகமூர்த்தி வந்துவிட்டார்.

அவருடைய வயதைப்பற்றி அடுத்தவர்கள் என்ன நினைத்தார்களோ? என்ன சொன்னுர்களோ? விநாயகமூர்த்தியின் கண்ணுடி மட்டும் ஆண்டுக்காண்டு அவருடைய வயதைக் குறைத்தே காட்டியது. வேட்டிக் கட்டிக் கொள்வதைவிட, ஸ்லாக்ஷர்ட்டும் 'பேண்ட்' டையுமே விநாயகமூர்த்தி அணிந்து கொண்டிருப்பதற்குக் காரணமே வயதுக் குறைப்புத்தான்.

ஜாதகத்தை எல்லா வகையிலும் நம்புபவர்தான் இவர். என்ருலும், தன் பிறந்த நாள் மட்டும் எப்படியோ தவருகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற உறுதியினுல் ஜாதகத்தை இவர் ஒப்புக் கொள்ளுவதில்லை.

தன் இளமையில் அவ்வளவு நம்பிக்கை இவருக்கு. அதனுல் ஊரில் எத்தனை இளைஞர் சங்கங்கள் உண்டோ அத்தனையிலும் உறுப்பினராக இருந்தார்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் குடியேறிய இவர் இரண்டாண்டுகளாகப் புதுவைக்கு வந்து விட்டதால் இவருக்குப் பிள்ளைகள் உண்டா? எத்தனை? என்ற விவரங்கள் நெருங்கிய நண்பர்க்கே தெரியாது. இவரும் இதைப் பற்றி மட்டும் எவரிடமும் சொல்வதே கிடையாது.

பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கொண்டு ஒரு வேளை தன் இளமையைப் பங்கப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சந்தான் அதற்குக் காரணம்.

மனைவி இறந்த ஓராண்டுக்குள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு விநாயகமூர்த்தி வந்ததே இந்த இளமை உணர்வால் தான்.

"எனக்கென்ன வயதா ஆகி விட்டது; இந்த வயதிலேயா துறவறத்தை மேற்கொள்வது?" இப்படித் தனக்குத்தானே சமாதானத்தையும் துணையாக்கிக் கொண்டார்.

உள்ளுரிலேயே ஒருவர் தன் பெண்ணைக் கொடுப்பதாகச்சொல்லி விட்டார். புதுமை உலகத்து இளைஞராயிற்றே; பெண்ணைப் பார்க்காமலா இருப்பது?

பெண்ணைப் பார்த்து விடுவது என்ற முடிவில் நாளையும் குறிப்பிட்டுச் சொல்லியனுப்பி விட்டார்.

எண்ணெய்த் தேய்த்து தலை முழுகினுர். அப்போது தானே. தலை பம்பிக் கொண்டு சுருள் சுருளாகக் காட்சி தரும். எண்ணெய்ப் பசையோடு தலை இருந்தால் மழுங்க வாரிக் கொள்ளும்போது, தலை சுருள் சுருளாக இருக்காதே.

ஐந்து மணிக்குப் பெண் பார்க்கப் புறப்பட வேண்டும். மூன்று மணிக்கே தயாரானுர் விநாயகமூர்த்தி. 'டை, பேண்ட், உடலோடு ஒட்டிய சிலாக் ஷர்ட்டையும்' அணிந்து கொண்டு கண்ணுடியின் முன் நின்ருர்.

அப்பப்பா! என்ன மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு!!

எத்தனை வகையான நாகரீகப் பூச்சுகள் உண்டோ, அத்தனையையும் முகத்தில் பூசிக்கொண்டார். மனதிற்கு முழுத்திருப்தி ஏற்பட்டது.

"இந்த 'சுனேவும்' கிரீமும். பவுடரும் மிக மிக உயர்ந்தவை" என்றுதான் விநாயகமூர்த்தி நினைத்தாரே தவிர இந்த 'உயர்ந்தவைகள்' தான் நம்மை இளமையாகக் காட்டுகின்றன என்ற உணர்வு மட்டும் அவருக்கு ஏற்படவில்லை.

தலையலங்காரம் ஒன்றுதான் மீதி. வழக்கமாகத் தடவிக்கொள்ளும் வாசனை எண்ணெய்த் தடவிக் கொள்ளா விட்டாலும், தலைமட்டும் மணத்தைப் பரப்புவதில் ஒரு மலர்த் தோட்டமாகவே காட்சியளித்தது.

இவ்வளவு நாளும் நின்று கொண்டுதான் தலைவாரிக் கொள்வார். இன்ருே, பெண் பார்க்கப் போகிருரே. 'ஸ்டூலை' இழுத்துக் கண்ணுடி அருகே போட்டுக் கொண்டு தலையலங்கார முயற்சியில் ஈடுபட்டார்.

அப்படியும் இப்படியுமாக மாற்றி மாற்றிச் சீவிக் கொண்டார். அரை மணி நேரத்தைக் கொன்ற பிறகு தான் மனதிற்கு நிறைவு ஏற்பட்டது.

சரியாக இருக்கிறதா என்று ஒரு முறை திரும்பவும் பார்த்துக்கொள்ளும் ஆவலில் முகத்தைக் கண்ணுடியின் அருகே கொண்டு சென்ருர். முகத்திற்கும் கண்ணுடிக்கும் இரண்டு அங்குளம் இடைவெளி தான்.

கூர்மையாகப் பார்த்தார்!

'ஐயோ' என்றலறியது அவர் நெஞ்சம்! குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல் என்பார்களே. அதற்குப் பொருளே அப்போதுதான் தெரிந்தது அவருக்கு.

நன்ருகக் கண்ணுடியைத் துடைத்துப் பார்த்தார்; அப்போதும் 'அது' தெரிந்தது.

'அதை' நன்ருக அழுத்தித் தேய்த்துப் பார்த்தார்; அப்போதும் அது அதாகத்தான் இருந்தது.

'ஐயோ! அது தூசாக இருக்கக் கூடாதா? ஏதாவது தும்பாக இருக்கக்கூடாதா? விநாயகமூர்த்தி துடித்தார்.

அவ்வளவிற்கும் காரணமான அது, ஒரு நரைத்த முடி. காதோரமாக இருந்தது!

விநாயகமூர்த்திக்கு வேர்த்துக் கொட்டியது. உடல் நடுங்கத் தொடங்கியது.

தலையை அப்படி இப்படியுமாகக் கலைத்துப் பார்த்தார். அங்கொன்றும்

(16-ம் பக்கம் பார்க்க)

# பகையுணர்ச்சி பரப்பாதீர்!

“திராவிட முன்னேற்றக் கழகம் அரசை ஏற்றுக் கொண்டதை இன்னமும் காங்கிரசுக்காரர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை; நிமிடத்திற்கு நிமிடம் அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியவில்லை; அதற்குக் காரணம் இருக்கிறது.

'இந்த இருபது ஆண்டுகளாக இருக்கின்ற அரசியல் தொடர்பில் காங்கிரசுக் கட்சி அல்லது காங்கிரசுக் கட்சியில் உள்ளவர்களிடையே மதிப்பு வைத்து நாங்கள் பழகுகிறோம். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதிப்பு வைத்து முன்னேற்றக் கழகத்தை அணுகிப் பழக்கமே இல்லை; துவக்கத்திலிருந்து, 'இது ஒரு கட்சியா' என்று விவாதித்துக் கொண்டிருந்தார்கள்; இது மழையிலே தோன்றிய காளானைப்போல் அழிந்துவிடும்' என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள்; 'அதற்குப் பொதுமக்கள் ஆதரவு வராது' என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கையைப் பொதுமக்கள் முறியடித்த பிறகுகூட — இப்பொழுதும்கூட அவர்கள், 'ஏமாற்று வித்தையினாலே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்' என்றுதான் நினைக்கிறார்களே தவிர, 'அவர்கள் ஆளுவதற்கு லாயக்கு உள்ளவர்கள்' என்று நினைக்கவில்லை! 'இன்னும் எத்தனை நாளைக்கு' என்ற பேச்சை நாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து அவர்கள் தங்களுடைய பேச்சின் முன்னுரையாகவே கொண்டிருக்கிறார்கள்!

'மார்ச் மாதம் 5-ந் தேதி அல்லது 6-ந் தேதி நாங்கள் பதவியேற்றோம் என்றால் அன்று முதல் அவர்கள், 'இன்னும் எத்தனை நாளைக்கு—இன்னும் எத்தனை நாளைக்கு?' என்றுதான் பேச்சை ஆரம்பிக்கிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை அவர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை!”

'கவர்னர் அவர்களுடைய பேருரையின் பேரில் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் பலரும் தத்தமது கருத்துக்களை மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர், சிறிதளவு ஆத்திரத்தோடு பேசினார்; அவருடைய ஆத்திரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

இறுதியிலே அவர் 'திருக்குறள் நிலைக்கு நாடு வந்துவிட்டதா' என்று கேட்டு, 'பசி இருக்கிறது—பிணி இருக்கிறது—பகை இருக்கிறது' என்றெல்லாம் குறிப்பிட்டார்.

நம்முடைய நாட்டிலே பசி—பிணி—பகைமை இன்னமும் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; அவர் குறிப்பிட்டபடி, பகை இருப்பது மட்டுமல்லாமல் அது இன்னும் கொழுந்துவிட்டெரிகின்ற அளவுக்குச் சென்று கொண்டிருப்பதையும் நான் உணருகிறேன்; இங்கே பேசப்படுகின்ற பேச்சுக்களிலும் பகைமை குறைக்கப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த கவலை கொண்டவனாகவும் இருக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவருடைய பேச்சு; 'பகைமையை ஒழிப்பதற்குப் பதிலாக பகையை வளர்ப்பதற்குத்தான் பெரிதும் பயன்படுகிறது என்பதைச் சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

பத்திரிகைச் செய்திகளிலே இருக்கின்ற தவறுகளாக இருந்தாலும், கூட்டங்களில் நடக்கின்ற கலவரங்களாக இருந்தாலும் அவற்றை நீக்குவதற்கும் போக்குவதற்கும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், இதழ் ஆசிரியர்களும் ஒன்று கூடி — ஒருமித்த கருத்துக்கு வந்து—'என்னென்ன முறையிலே செய்திகளை வெளியிடுவது? கூட்டங்களை நடத்துகின்றபொழுது, என்னென்ன ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்' என்பதிலெல்லாம் அவர்கள் ஒத்த கருத்துக்கு வருவார்களானால் நான் மெத்தவும் போற்றி வரவேற்கிறேன்.

மதுரையில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி சமரச ஏற்பாட்டுக்கு வந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன்; அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றது என்பதைப் பற்றிய முழுத்தகவல் கிடைக்கவில்லை; அந்த முயற்சி வரவேற்கத்தகுந்த முயற்சி என்பதால் பாராட்டுகிறேன்.

அரசியல் கட்சித் தலைவர்களும் இதழாசிரியர்களும் பகையை வளர்ப்பதிலே நாட்டம் கொள்ளாமல் இருக்கக்கூடிய முறையில் — அப்படிப்பட்ட முயற்சியிலே எதிர்க் கட்சித் தலைவர் ஈடுபடுவாரானால் நான் அவருக்குத் துணை நிற்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு வங்காளத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், பாஞ்சாலத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், வேறு சில இடங்களிலே காங்கிரசு அல்லாத அரசையும் வரை முறையில்லாத வழிகளில் எல்லாம் சென்று கவிழ்க்க முயற்சி செய்ததற்குப் பிறகு—ஒரு புலி ஒரு முறை இரத்தத்தைக் குடித்துவிட்டால் அதை, 'புலி' என்று சொல்லாமல், 'மனிதனைக் கொல்லுகின்ற பிராணி' அல்லது 'மேன் ஈட்டர்' என்ற நிலைக்கு வந்து விட்டதாகச் சொல்லுகிறோம் — காங்கிரசு இல்லாத ஆட்சிகளை யெல்லாம் கவிழ்த்துவிட்ட பிறகு, தமிழக அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது!



அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்களே காங்கிரசு மாநாட்டிலே வெளிப்படையாகப் பேசினார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாததால்தான் எடுத்ததற்கெல்லாம் இந்த ஆட்சியைப் பற்றியும், ஆட்சியினிடத்திலேயும் பகையுணர்ச்சி உங்களுக்கு இருக்கிறது!

'இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் சதி செய்தோமா' என்று பேசினார்கள். நாங்கள் 138 பேர்களாக இல்லாமல் ஐந்தாறு ஓட்டு வித்தியாசத்தில் தோற்பவர்களாக இருந்திருந்தால், 'என்னென்ன செய்திருப்பீர்கள்' என்பதை யூகித்துக் கொள்ள முடியும்; 'என்னென்ன நடைபெற்றிருக்கிறது' என்பதும் தெரியும். 'திருத்தத்தில்கூடக் கூட்டுச் சேர மாட்டோம்' என்று சொன்ன அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி, 17 பேர்கள் கொண்ட ஒரு கட்சியை அரசாளவிட்டு அவர்களுக்குத் துணை செல்வதைப்போல், காங்கிரசுக் கட்சிக்கு ஒரு கேவலமான நிலைமை இருக்க முடியாது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்!

'17 பேர்கள் எங்களை ஆதரிக்கிறார்களா' என்று கேட்பதற்கு இல்லாமல், '17 பேர் ஆளுங்கள்; நாங்கள் பக்கத்துணையாகச் செல்கிறோம்' என்று இருப்பது, பத்மினி நடனத்திற்கு புலி வேடக்காரன் தாளம் போடுவதற்கு ஒத்ததாகத்தான் இருக்கும்!

17 பேரைக் கொண்ட ஒரு கட்சியைக் கூப்பிட்டு, 'நீங்கள் அரசு அமையுங்கள்; நாங்கள் அதைப் பார்த்துக்கொள்கிறோம்' என்று சொல்லுவது ஒரு கட்சியின் இலக்கணத்திற்கோ, அரசியலுக்கோ ஒத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அது காங்கிரசின் மரபுக்கு ஒத்ததாக இருக்கிறது.

ஏனென்றால், கேரளத்தில் பட்டம் தாணுப்பிள்ளை இடத்தில் குறைவான எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் இருந்த நேரத்தில், 'நீங்கள் முதலமைச்சராக இருங்கள்; நாங்கள்—வெறும் அமைச்சர்களாக இருக்கிறோம்; நம்பூதிரிபாடு அமைச்சரவை இல்லாமல் இருந்தால் அதுவே போதும்' என்று சொன்ன மரபு அவர்களுக்கு இருக்கிறது.

நான், 'மரபு' என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, அது 'சரியான மரபா—சரியல்லாத மரபா' என்று சொல்லவில்லை!

அந்த மரபின்படி, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாததால்தான், இந்தப் பகை உணர்ச்சியெல்லாம் வருகிறது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பகை உணர்ச்சியை நீக்குவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னவிதமான யோசனைகளை மேற்கொள்வதாக இருந்தாலும் அதற்கு நண்பனாக நானும் பக்கத்திலே இருப்பதை அவர்கள் பார்க்கமுடியும் என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

"ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையைப் புறக்கணித்ததன் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருப்பது சரியானது அல்ல; நாங்கள் வேளாண்மைத் துறையிலே இன்னின்ன அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஒரு பிரச்சினையிலே 'வெற்றியா' தோல்வியா' என்று பார்ப்பதற்கு மூன்று அம்சங்கள் இருக்கவேண்டும் —அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி; அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்; அதைக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்; — இந்த மூன்றுக்கும் ஒத்துவந்தால்தான், 'வெற்றி' என்று கூற முடியும்; அல்லது, தோல்வி' என்று கூறமுடியும். நான்கு பேர் சேர்ந்து ஓட்டப் பந்தயத்திற்குப் போகின்றபோது அதிலே கலக்காத ஒருவன், எல்லாம் முடிந்த பிறகு, 'நானும்தான் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றேன்' என்று சொல்வதைப்போல் நீங்கள், 'விவசாயத்தில் வெற்றி பெற்றுவிடடோம்' என்று சொல்லுவதும் இருக்கிறது!

ஆய்வாளர்கள் — ஒவ்வொருவரும்—பொருளாதார வல்லுநர்கள் ஒவ்வொருவரும், ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்—அதற்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள் — அதை நிறைவேற்றிய முறைகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது 'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அதைத்தான் இங்கே கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, 'ஐந்தாண்டுத் திட்டங்களில் எதுவுமே நடைபெறவில்லை' என்று கூறவில்லை.

சவலைக் குழந்தைக்கும் — திடகாத்திரமான குழந்தைக்குமிடையே வித்தியாசம் பார்ப்பதற்கு முன்னால், 'எத்தனைமாதக் குழந்தை' என்று கேட்டு–'பத்து மாதக் குழந்தை' என்று பதில் சொல்லிய பிறகு — '10 மாதக்

குழந்தைக்கு உள்ள வளர்ச்சி இல்லையே; இது சவலைக் குழந்தையாக இருக்கிறதே' என்று கூறுவது உலக வாடிக்கை! 'முன்பு சுட்டுவிரல் $1\frac{1}{4}$ அங்குலம் இருந்தது; இப்போது $1\frac{3}{4}$ அங்குலம் இருக்கிறது; அவயத்திலேயே நாணயமான அவயத்தைக் குறிப்பிட்டேன்' — என்ற முறையில் விவசாயம் வெற்றிபெற்றிருக்கிறது!

'வளர்ந்திருக்கிறது' என்று சொல்வது தங்களுடைய தோல்வியை மறைப்பதற்காகத்தான்! இதைப் பற்றிக் கவர்னர், தமது உரையிலேயே சொன்னதைப் பற்றிக்கூட, 'நாங்கள் சொல்லி கவர்னர் குறிப்பிட்டிருக்கிருர்' என்ற அரசியல் பிரச்னையைக் கிளப்பினுர்கள்.

அப்படியே வைத்துக்கொண்டாலும்கூட, முன்னுலே அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருந்த திரு. சஞ்சீவையா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றிக் கொடுத்திருக்கிற விமரிசனங்களைப் படித்துப் பார்க்கவேண்டும்; 'வெகு தொலைவில் உள்ளவர் கூறியதைப் படித்துப் பார்க்கமாட்டோம்' என்று கூறினுல், அவருக்கும் எனக்கும் மிக நெருங்கிய நண்பரான திரு. சுப்பிரமணியம் அவர்கள், 'ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்ட பலன்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற கோபத்திலேதான் காங்கிரசைத் தோற்கடித்துவிட்டிருக்கிருர்கள்' என்று சில திங்களுக்கு முன்னுல் கோவையில் பேசியதன் பொருளை மறந்துவிடமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே ஐந்தாண்டுத் திட்டங்களினுல் வேளாண்மைத் துறை சரியான அளவு முன்னேறவில்லை' என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாகிவிட்டது; அதை நாங்கள் எடுத்துச் சொல்வதால், நண்பருக்கு ஆத்திரம் வருகிறது.

சில மனைவிமார்கள்பற்றிக் கதை சொல்வார்கள்— 'அவர் அடித்தது அவ்வளவாக வலிக்கவில்லை; அண்டை வீட்டுக்காரன் சிரித்தானே—அதுதான் தாங்க முடியவில்லை' என்பதைப் போன்றதுதான், 'ஐந்தாண்டுத் திட்டங்களால் வேளாண்மைத் துறை வெற்றிபெற முடியவில்லை' என்பது! ஆனுல் இதை அண்ணுதுரை சொல்கிறபோது 'ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது, என்ற கதைப்போக்கில் பேசுகிருர்களே தவிர, அவர்களுக்கே அது தெரியும்.

'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் போதுமான வெற்றி பெறவில்லை' என்பது, இந்தியா முழுவதும்—வெளிநாடுகளிலும் நிபுணர்களின் கருத்தாகும்; அதைத்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள்.

'ஏ. டி. டி. 27 எது தெரியுமா? நண்பர் சுப்பிரமணியம் கொண்டுவந்தது' என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னுர். 'சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய நண்பர்' என்று சொல்லக்கூடிய உரிமை எனக்குக்கூட இருக்கிறது; 'அது அவர் கண்டுபிடித்தது' என்று பெருமையோடு சொல்வார்களானுல் நானும் கூட வரவேற்பேன்.

1950-ம் ஆண்டு எப். ஏ. ஓ.வின் உலக நாடுகள் அவையில் விவசாயப் பிரிவுக்காக ஏற்படுத்திய இடத்தில், 'போகூர்' என்ற இடத்தில் முதன் முதலாக மாநாடுகூடி புதிய ரக நெல் விதைகளைத் தயாரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு — இரண்டாவதாக ஜாகர்தாவில் கூடிப் பேசப்பட்டு—அதற்கு அடுத்த ஆண்டில் பாங்காக்கில் கூடி அங்கும் பேசப்பட்டு — அதை நிறைவேற்றிக் கொடுக்கிற பொறுப்பு ஆடுதுறைக்கு அளிக்கப்பட்டது.

இதற்குப் பாத்தியதை கொண்டாட வேண்டுமென்று சொன்னுல் நண்பர் கருத்திருமன் அவர்கள் வெகுதொலைவு போகவேண்டும்.

நண்பர் சுப்பிரமணியம்தான் கண்டுபிடித்ததாகச் சொன்னுலும் — நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு; 'பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்குத்தான் பெருமை அதிகம் கிடைக்கும்; பெற்றுப் போட்டுவிடலாம்! வளர்ப்பதிலேதான் பெருமை இருக்கிறது' என்று—அதுபோல், நாங்கள் அதை நல்ல முறையில் வளர்த்திருக்கிருேம் என்ற முறையில் நண்பர் அவர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

மற்றும் ஒன்றைச் சொல்லுகின்றபோது அவர், 'நான் கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்று குறிப்பிட்டார்; அதை நான் மிகவும் பாராட்டுவதோடு வரவேற்கிறேன்.

'கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்பது மட்டுமல்லாமல், 'கொள்முதலை எப்படி இலகுவாகச் செய்யலாம்' என்பதுபற்றியும் பலமுறை யோசனை சொல்லிக்கொண்டு வருகிருர்கள். அந்த யோசனைகளைப்பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசுகின்றபோது, அதை அவர்கள், 'சரியானது' என்று ஒத்துக்கொள்ளாததால் விவாத நிலையில் இருக்கிறதே தவிர, அவர் சொல்லுகின்ற யோசனைகள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று மனத்தாங்கல்கொள்ளத் தேவையில்லை; இன்னும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிருேம்.

இன்னென்றும் அவர் சொன்னுர் — 'நீங்கள் நெல் விலையை அதிகப்படுத்துங்கள்; நான் மத்திய அரசை ஒரு கை பார்க்கிறேன்' என்று!

'ஒருகை பார்க்கிறேன் — ஒருகை பார்க்கிறேன்' என்பது, தமிழகத்தில் தவருக வந்துவிட்ட ஒரு பழமொழி. இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு பார்க்கலாமே! ஒருகை ஒரு காரியத்திற்கும், மற்றொரு கை இன்னொரு காரியத்திற்கும் என்று இருக்கத் தேவையில்லை!

மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து பார்த்து அவர்கள் கொடுத்திருக்கின்ற காரணத்தைத்தான் நாங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிருேமே தவிர, 'அதையொட்டித்தான் நாங்கள் நடந்துகொள்கிருேம்' என்று நான் சொல்லவில்லை.

புது ரக நெல் வந்திருப்பதை எதிர்க் கட்சித் தலைவர் ஒத்துக் கொண்டபிறகு—அந்தப் புது நெல்லால் விளைச்சல் அதிகமாகிறது என்பதை ஒத்துக் கொண்ட பிறகு—ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் அதிக நெல் கிடைக்கும்போது—ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கக் கூடிய வருவாய் இயற்கையாகவே அதிரித்திருக்கும் போது—அதிக வி[illegible]கூடக் கொடுக்காமல் அவர்களுக்கு ஆதாயம் அதிக[illegible]றது என்பது சாதாரண கணக்கு. அப்படியிருப்பதில் போனசு மூன்று ரூபாய் விலையோடு கூட கூட்டி 48 ரூபாய் அளவிற்கு இன்றையத் தினம் கொடுத்துக்கொண்டு வருகிருர்கள்.

ஆகவே, கொள்முதல் விலையை அதிகப்படுத்தத் தேவையில்லை என்பதற்கு எங்களுக்குத் தெரிந்த நியாயமும் இருக்கிறது; அந்த நியாயத்தை ஆதரிக்கும் முறையில் மத்திய அரசிலும் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

மத்திய அரசு சொன்னது மட்டுமல்ல—திட்டக் குழுத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

ஆகவே, 'கொள்முதல் விலையை அதிகப்படுத்தவில்லை—அதிகப்படுத்தவில்லை' என்ற பேச்சை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று கருதுகிறேன்.

இன்னொரு வகையில் பார்த்தால், இவர்கள் 'நெல்லுக்கு அதிக விலை வாங்கிக் கொடுக்கவேண்டும்' என்ற நல்லெண்ணத்தோடுகூடப் பேசுவதாகத் தெரியவில்லை. எப்படியாவது இந்த அரசுக்கு ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டாக்கலாமா என்பதுதான்!

அதனுல்தான் அவர்கள், ரூபாய்க்கு ஒரு படி அரிசி இங்கு மட்டும் போடுகிறீர்களே—மற்ற இடங்களுக்கு ஏன் போடவில்லை; எல்லா இடங்களுக்கும் போடுங்கள்' என்று கூறி, "நெல்லுக்கு அதிக விலை கொடுத்து வாங்குங்கள்—அதிக விலை வாங்கி எல்லா இடங்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு, வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாமல் நீங்கள் திண்டாடுங்கள்—அதை நாங்கள் வேடிக்கை பார்க்கிரும்—வேடிக்கை பார்த்து, மத்திய அரசிடம், 'இவர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியவில்லை; ஆகவே திண்டாடுகிருர்கள்' என்று எடுத்துச் சொல்லி—அதற்கு ஏதாவது இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு வழி இருக்குமானுல்—அவர்களை நீக்க முயற்சிக்கிரும்" என்று, அந்தப் பழைய இடத்திற்குத்தான் போகிருர்கள்!

நான்கூட வேடிக்கையாகச் செய்வதானுல், இப்போது எல்லா இடங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று உத்திரவு இட்டுவிட்டு — இருக்கிற அரிசியை எல்லா இடங்களுக்கும் அளந்துபோடச் சொல்லி-ஒரு மூன்றுமாத காலத்தில், வரவு--செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது' என்பதைச் சொல்லிவிட்டு—நாங்கள் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கிரும் என்று சொல்லிவிடுவேனுனல், அடுத்த ஆறு மாதங்களுக்கு வேண்டுமானுல் உங்களுக்கு சற்று நிம்மதியிருக்கலாம் —குடியரசுத் தலைவர் ஆட்சி இருக்கிறபோது!

ஆனுல் மறுபடியும் பொதுமக்களிடம் போகிறபோது, இதைத்தான் உங்களிடம் கேட்பார்கள்— 'அண்ணுதுரை விலகுவதற்கு முன்னுல் ரூபாய்க்குப் படி அரிசி என்று எல்லா இடத்திற்கும் போட்டானே- நீங்கள் போடுவீர்களா — போடமாட்டீர்கள்; ஆகவே, அப்படிப் போடாத உங்களுக்கு நாங்கள் ஏன் ஓட்டு போடவேண்டும்' என்றுதான் சொல்லிவிடுவார்கள்!

ஒன்றை உங்களிடம் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—'மக்களுக்கு நன்மை செய்ய முடியாது' என்று திட்டவட்டமாக எனக்குத் தெரிந்தால், தெரிந்த மறுகணமே நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கமாட்டேன்!

அப்படி ஆட்சிப் பொறுப்[illegible] நான் இல்லாத நேரத்தில் மறுபடியும் நீங்கள் [illegible]வகு சுலபத்தில் உள்ளே வருகிறபடி வழியை வைத்து[illegible]விடுவேன் என்று நீங்கள் கருதவேண்டாம்!

நான் விலகிவிட்டால் நீங்கள் உடனே வந்துவிடலாம் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபடவேண்டாம்!

'இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று நாங்கள் சதி செய்கிரேமா என்று விநயகம் அவர்கள் கேட்டார்கள்.

## அடுத்த கிழமை?

**தம்பி,**

உடல் நிலை ஒருபுறம், ஊர்நிலை ஒருபுறம், நிதிநிலை இன்னெரு புறம். இக்கிழமையும் 'இன்ப ஒளி' மூலம் உன்னேடு அளவளாவ முடியவில்லை. என்று கூற எனக்கே வருத்தம்தான். உனக்கு அதிகம் கூறவா வேண்டும்? அடுத்த கிழமை எழுதுகிறேன்.

அண்ணன்,
அண்ணுதுரை.

சதி என்ருல் வெளியே தெரியாது! இதில் சதியே தேவை இல்லை! நீங்கள் பேசுவதிலிருந்தே, அது உங்களது எண்ணமாக இருக்கிறது—திட்டமாக இருக்கிறது என்பது தெரிகிறது! அதில் நட்டமடையக் கூடியவர்கள் நிச்சயமாக நாங்கள் அல்லர் — நட்டமடையக்கூடியவர்கள் இந்த நாட்டு மக்களாக இருப்பார்கள்; அல்லது சனநாயகமாக இருக்குமே தவிர, நாங்களாக இருக்கமாட்டோம்! என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்த சட்டமன்றத்தில் நான் பேசுகிறபோது, ஒவ்வொரு நாளும், 'இதுதான் கடைசிப் பேச்சாக இருக்கலாம்' என்ற எண்ணத்தோடுதான் நான் பேசிக்கொண்டு வருகிறேனே தவிர அப்படியே குச்சு அடித்து இங்கேயே உட்கார்ந்து இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதை — 'இவர்களைக் கவிழ்க்கலாமா? இந்த அரசை நீக்கலாமா?' என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

'வேளாண்மைத் துறையில் இவர்கள் ஒன்றும் செய்யவில்லை' என்பது மட்டுமல்ல — 'நாங்கள் எவ்வளவோ தொழிற்சாலைகளை ஆரம்பித்துவைத்தோம்; இவர்கள் வந்து தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிட்டார்கள்' என்று சொன்னுர்கள்.

ஆந்திராவில் காங்கிரசு அரசாளுகிறது — அங்கு 1967 மார்ச்சிலிருந்து செப்டம்பர் வரையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு தரப்பட்டிருக்கிற தொழில்கள் 6; ஆரம்பிப்பதற்காக வந்திருக்கிற கடிதங்கள் 2!

மைசூரில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு கொடுத்திருக்கிற தொழில்கள் 5; கடிதம் வந்திப்பது 2!

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு கொடுக்கப்பட்ட தொழில்கள் 10; 'புதிதாகத் தேவை' என்று கடிதங்கள் வந்திருப்பது 6!

ஆகவே, நாங்கள் வந்தபிறகு, தொழில்கள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன' என்று சொல்வது உண்மைக்கு மாருனது என்பது மட்டுமல்ல—காங்கிரசு அரசாளும் இடங்களைவிட ஒரு படி அதிகமாக இங்கு தொழில்கள் வளர்ந்திருக்கிறதே தவிர, குறையவில்லை!

முதலமைச்சர் அறிஞர் அண்ணு
(சட்டமன்றத்தில்)

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## "சிவலோக பதவி" சேருமோ?

பொதுத் தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை, மத்திய அரசு கௌரவிக்க வைத்திருக்கும் ஒரே ஒரு வழி, அத்தகையவர்களுக்கு ஒரு கவர்னர் பதவி கொடுத்து விடுவதாகும். இந்தப் புனிதமான திருப்பணியை கடந்த காலத்தில் மத்திய அரசு மிகத் தாராளமான முறையில் செய்துவந்திருக்கிறது. செத்த பின் சிவலோக பதவி அடைவது என்பது புராண வழக்கு. தேர்தலில் தோற்றபின் கவர்னர் பதவி பெறுவது என்பது புதுக்கால மரபு. அந்த மரபை யொட்டி தமிழ் நாட்டில் ஒருவருக்கு "யோகம்" அடிக்கவிருக்கிறதாம்! 'கற்பாறை' போன்ற இளகிய நெஞ்சத்தினர் என்று ஏற்கெனவே 'புகழாரம்' சூட்டப் பெற்றவர் பக்தவத்சலம்அவர் ஆந்திரமாநிலத்துக்கு கவர்னராக நியமிக்கப் படலாமென்று (வ)தந்தி வந்துள்ளது! உண்மையானால், 'ஆந்திர மாநிலத்தின் இப்போதைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சி 'வேகம் குறைந்தது' என்று எதிர்காலம் சுட்டிக் காட்டத்தக்கதாக ஆகும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

## இன்னொன்றும் "கோவிந்தா"வா?

கட்ஜ்-ரண் பகுதியை பாகிஸ்தானுக்குக் கொடுத்து விடக் கூறி, உலக நீதிக் குழு ஆணை பிறப்பித்ததும் அதன் எதிரொலி இப்போதுதான் 'சூடு" பிடிக்கத் தொடங்கி இருப்பதும் வெளி உலகுக்கு ஒரு "அரசியல் கோமாளித்தனம்" என்றவகையில் கருவாகி இருக்கிறது. இது ஒரு முடிவுக்கு வருமுன்பாக, இலங்கை நாடு, இந்தியாவைப் பார்த்து தொடை தட்டிக்கொண்டு வந்து நிற்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் மத்திய அரசின் கடந்த கால நடவடிக்கைகள் மூலம் அது முன்னெச்சரிக்கையுடன்தான் செயல்பட்டு வருகிறது என்பதுஒப்புக்கொள்ள முடியாததாகும். அடிவிழுகின்ற வரையில், உறக்கம் கலைந்து விழிப்பதில்லை, செம்மையடியைப் பெற்றுக்கொண்ட பின்னரே ஐல்லடம் கட்டிப் பாயும் தன்மை மிக மிக அருவெறுக்கத்தக்கதாகும்! இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத் தீவு பகுதியை பல ஆண்டுக் காலமாக, இலங்கை தன் பகுதி என்று சொல்லி வந்திருக்கிறது. இதனை மறுப்பது போல, சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை இந்தியா மறுத்துரைத்தது! தீவிரத் தன்மையும், முன்எச்சரிக்கையும் கொண்ட வகையில், இலங்கை கச்சத்தீவை, தன் ஆதிக்கத்துக்குக் கொண்டுவந்து விட்டதாக இப்போது அறிவிக்கப் பெற்றுள்ளது. ரண் பகுதிக்கு ஏற்பட்ட முடிவு-கச்சத் தீவுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பது நம் விருப்பம்; பெறுவோமா? இழந்து விடுவோமா?

## தகுதிகள் வேண்டும் ஐயா!

அரசியல் என்பதனை, அயோக்யர்களின் புகலிடம் என்று வருணனை செய்திருந்தார் மேனாட்டு மேதை ஒருவர். அரசியலிடத்தில் அவருக்கு அவ்வளவு வெறுப்பு, இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் பற்றி மட்டும், அவர் அப்படிச் சொல்லிவிடவில்லை. அகிலத்தின் அரசியலே அவருக்கு அப்படித்தான் தென்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில், அரசியலில் புகுவோருக்கு சில பல தகுதிகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று சில காலமாகவே பலர், கருத்தறிவித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வகையில் தமிழக மன்னர்கள் கால வரலாறு துணைக் கண்டம் முழுமைக்கும் ஒரு வழி காட்டியாகும். அரசியலில் நுழைவோருக்குச் சில தகுதிகளை அது நிர்ணயித்துக் காட்டுகிறது; அப்படியே செயல்பட்டு புகழ் பொறித்தும் போயுள்ளனர். இப்போது, அரசியலில் ஈடுபாடுள்ளவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கவேண்டுமென்று முதியவர் வினோபா அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள். பிற எல்லா துறையையும்விட, அரசியல் துறை, ஒரு வகையில் முழுமையான பட்டறிவு வேண்டப்படும் துறையாகும். அந்தவகையில் நின்றுதான் இதுபற்றி ஆய்வு செய்யவேண்டும்; அதே வேளையில், அரசியலில் புகும்போதே சிலபல தகுதிகளை வரையறை செய்துவிடுவது மிகச் சாலச் சிறந்ததாகும்.

## குற்றவாளிக்குப் பதவி!

நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டு, உயர்நீதி மன்றத்தால், தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒருவருக்கு அரசாங்கச் செயலாளர் பதவி தரப்பட்டிருக்கிறது. விற்பனைவரி அதிகாரியாக இருந்த ஒருவர் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்டார். அவருக்குத்தான் ராஜஸ்தான் மாநில அரசு, பார்லிமெண்டரி காரியதரிசி பதவியை வழங்கி இருக்கிறது! குற்றவாளிக்குரிய சரியான தண்டனை, பதவிகள் தருவதும் பாராட்டு வழங்குவதும்தான் என்றால்........ அரசியல் பிழைக்குமா?

## மிஞ்சப் போவது எதுவோ?

ஆட்சி அதிகாரத்தின்மீது தான் மத்திய அரசு, ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்ற நினைவு எவ்வளவு தவறானதாகி விட்டது! நிலப் பகுதியின்மீது கூட அது பாத்தியதை கொண்டாடும் வகையில் அரசியல் சட்டம் இடம் வகுத்துக் கொடுத்திருக்கிறது என்றால், அந்த சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய வேளை அணுகிக்கொண்டிருக்கிறது என்பதல்லவா பொருள்! தமிழக வரலாற்றில் அன்றும் சரி, இன்றும் சரி வேலூருக்கு ஒரு தனி இடம் உண்டு. மாநிலங்களின் உரிமை, எந்தெந்த அளவுக்கு மத்திய அரசினால் பறிக்கப்பட்டுள்ளது என்பதற்கு இப்போது வெளியாகி இருக்கிற ஒரு செய்தி தக்க சான்றாகும். வேலூர் கோயில், மற்றும் கோட்டையினைப் புரந்து காக்கும் பொறுப்பினை பெரிய மனது வைத்து மத்திய அரசே ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறது. தமிழகம், தானே அதனைக் கவனித்துக் கொள்வதாகக்கூறி 'அனுமதி'கேட்டிருக்கிறது! ஒருமைப்பாட்டுக்காக உயிரையும் கொடுத்துச் செயலாற்றுபவர்கள் அல்லவா மத்திய அரசினர்! அந்தப் புரவலர்கள் பெரிய மனதோடு மறுத்துவிட்டார்களாம். கல்லக்குடியைப்போல! மாநிலங்களின் உரிமையென்று எதிர் காலத்தில் எதனைத்தான் விட்டு வைப்பார்களோ, தெரியவில்லை!

தொகுப்பு: ராஜிமணாளன்.

# மக்களாட்சி மாண்புகள்!

[செய்யாறு—செல்வம்]

மனித சமுதாயம் முடியாட்சி பிரபுத்துவம் (Aristocracy) ஆகிய அரசியல் அமைப்புகளின் கீழ் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து, பல இன்னல்களையும் அனுபவங்களையும் பெற்று இறுதியில் குடியாட்சியே இவை எல்லாவற்றையும்விட சிறந்த அரசு என்ற முடிவுக்கு வந்து தற்போது குடியாட்சியின் கீழ் வாழ்ந்து வருகின்றது. மக்களின் அறிவும், அரசியல் அனுபவமும் வளர வளர மக்களாட்சியின் வடிவமும், அடிப்படையும் பல நாடுகளில் வேறுபட்ட உருவம் பெற்று விளங்கி வருவதைக் காண்கிறோம். அமெரிக்க ஜனநாயகத்தில் தனி உடைமை ஏறத்தாழ முழு சுதந்திரத்துடன் அரசோச்சி வருவதை நாம் காண்கிறோம். "ஜனநாயகத்தின் தொட்டில்" என்று அழைக்கப்படும் இங்கிலாந்து தனி உடைமையைக் கட்டுப்படுத்திப் "பொதுநல அரசு" என்ற இலட்சியத்தை நோக்கி நடைபோடுவதைக் காண்கிறோம்.

குடியாட்சி என்ற கட்டிடத்தின் அடிக்கல்—ஆளுவோர், ஆளப்படுவோருக்குப் பதில்கூறக் கடமைப்பட்டவர்கள் என்பதுதான். ஆளுவோர் ஆளப்படுவோரின் விருப்பங்களையும் தேவைகளையும் புறக்கணிப்பார்களேயானால் அவர்களை அடுத்த பொதுத்தேர்தலிலேயே தூக்கி எறிவதற்கு, மக்களுக்கு 'வாக்குரிமை' என்ற வன்மையான ஆயுதம் உண்டு.

அரசாங்கம் பொதுமக்களின் நலனைப் பேணும் அரசு என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், எந்த வழிவகைகளில் ஓர் அரசானது நியாயமான சமூக அமைப்பை உருவாக்க இயலும் என்பதுதான் நம் கேள்வி.

நியாயமான சமூக அமைப்பில் தனி மனிதனுக்குப் பாதுகாப்பு, அரசியல் உரிமை, பொருளாதார சமத்துவம் சமூக ஒற்றுமை இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த அடிப்படைத் தேவைகளை ஜனநாயகம் எந்த அளக்குப் பூர்த்தி செய்கிறதோ அந்த அளவுக்குத்தான் அது வெற்றி பெற்றதாகச் சொல்லமுடியும். ஜனநாயகத்தால் இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியுமா? முடியும் என்பதுதான் நமது ஆணித்தரமான பதில்.

ஆனால் ஜனநாயகம் இந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய சில நிபந்தனைகள் உள்ளன. ஜனநாயகத்தில் ஆளுவோர் தங்களின் தலைமைப் பீடத்திற்குரிய ஜனநாயகக் கடமைகளையும், ஆளப்படுவோர் குடிமக்களுக்குரிய ஜனநாயகக் கடமைகளையும் செவ்வனே நிறைவேற்ற வேண்டும்.

ஆளப்படுவோரின் நல்வாழ்விற்கான திட்டங்களையும் தேவைகளையும் அவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்கி அவர்களைத் தங்கள் பாதைக்குக் கொண்டு வருவதுதான் ஜனநாயகத்தில் தலைமைப் பீடத்தின் கடமையாகும்.

சமூகத்தில் போதிய உணவு உற்பத்தி இல்லாமல், மக்கள் பட்டினியால் வாடலாம். உறங்கிக் கிடக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தாததால் - தொழில் மந்தம் நிலவி பலர் வேலை வாய்ப்பின்றி தவிக்கலாம், இவற்றைப் போக்குவதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறி, மக்களின் சிந்தனையைத் தூண்டி. அவர்களைத் தங்கள் வழிக்குக் கொணர்வதுதான் ஜனநாயகத்தில் அரசியல் (கட்சித்) தலைவர்களின் தலையாய கடமையாகும். அரசியல் தலைவர்கள் இதில் முக்கிய பங்கு வகித்தாலும், மற்றுமுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், பத்திரிகைகள், எழுத்தாளர்கள் பேச்சாளர்கள், சமூகத் தொண்டர்கள் ஆகியோருக்கும் பொதுமக்களின் கருத்தை மேற்கூறியவழியில்திரட்டுவதில் பங்குண்டு.

உதாரணமாக தி. மு. கழகம். ஏழை எளியவர்கட்கு, உணவுப் பொருள் மலிவு விலையில் கிடைக்கபடி அரிசித் திட்டத்தையும், பொருளாதார ஏற்றத் தாழ்வை ஓரளவு குறைக்க பஸ் போக்குவரத்து நாட்டுடைமைத் திட்டத்தையும் தேர்தலுக்கு முன், மக்களின் முன்னால் பிரசாரம் செய்து வந்தது. தமிழக மக்களும் தி. மு. க. - வை ஆட்சியில் அமர்த்தியதன் மூலம், அத்திட்டங்களுக்குத் தங்களின் ஒப்புதலை அளித்துள்ளனர்.

ஜனநாயகத்தில் ஓர் அரசியல் மேதையின் தலையாய கடமை மக்கள் கருத்தைப் பின்பற்றுவது மட்டுமல்ல; மக்கள் கருத்தை உருவாக்குவதுதான். மக்களில் பெரும்பாலோர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓட்டுப் போடுவதுதான் தங்களுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு என்று எண்ணுகின்றனர், சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளியவர்கள் இன்று பொழுதை நாம் எப்படியோ கழித்து விட்டோம்; நாளைப் பொழுது நாம் எப்படி நம் அன்பு மனைவியையும் மழலை மொழி பேசும் குழந்தைகளையும் பசியின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றுவது. நாளைக்கு எங்கே நமக்குக் கூலி வேலை கிடைக்கும் என்ற இந்த சோற்றுப் பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சமூக ஏணியின் உச்சியில் இருக்கும் உல்லாச புரியினர் அறுசுவை உண்டி, ஆரணங்குகள், கேளிக்கை, உறக்கம் என்று இவற்றிலேயே தங்களின் வாழ்வைச் செலவிடுகின்றனர்.

இத்தகைய மக்களிடத்தில் பொது நல வேட்கையை நாட்டுப் பற்றை, இனப் பற்றை, மொழிப் பற்றை, கடமை உணர்வை, அரசியல் உணர்வைத் தட்டி எழுப்புவது என்பது, காட்டைத் திருத்தி, உழுது பண்படுத்தி, விதைத்து, உரமிட்டு, களையெடுத்து, கண்காணித்து செந்நெல் அறுவடைக் காண்பதைப் போன்ற அரிய செயலாகும்! அத்தகைய தொடர்ச்சியான செயலைச் செய்வதே, மக்களாட்சியில் அரசியல் தலைவர்களின் முதல் கடமையாகும். மக்கள் விரும்புகின்ற சட்டத்தை மட்டும் கொண்டுவரும் அரசியல் வாதியை, அறிஞர் பெர்னார்டுஷா அவர்கள் குருடனின் நாய்க்கு ஒப்பிடுகிறார். குருடன் நாய் இழுக்கின்ற பக்கம் மட்டுதான் செல்லமுடியும். மக்கள் விரும்பும் சட்டத்தை மட்டும் நிறைவேற்றும் அரசியல் தலைவன் தன் கடமையிலிருந்து நழுவுவதற்குச்சமம். சிறந்த அரசியல் தலைவனின் தலையாய கடமை—தனக்கு நல்லது என்று பட்டதை அச்சம், தயை, தாட்சண்மின்றி பலரறிய எடுத்துக் கூறுவதுதான். கருத்தை வெளியிடுவதோடு அதற்குத் தொடர்ந்து மக்களின். ஆதரவைத் திரட்டுவதும் அவர்கள் செய்யவேண்டிய பணியாகும்

அறிஞர் அண்ணா தமிழகத்தில் சீரணியைத் துவக்கியபோது எதிர்க்கட்சியினர் அதைக் கட்சியை வளர்க்கும் திட்டம் என்றுதூற்றினர். சீனத்துச் செங்காவலர் படைக்கு ஒப்பிட்டனர். ஆனால் இன்று அவர்கள் வெட்கித் தலை குனியும் வண்ணம், சீரணியினர் கட்டி முடித்த பள்ளியைப் பார்த்த சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்

அத்திட்டத்தை உச்சிமேல் வைத்து மெச்சியிருக்கிறார். காத்தியார் இன்று உயிரோடு இருந்திருந்தால் சீரணியின் தன்னலமற்ற பணியைப் போற்றிப் புகழ்ந்திருப்பார் என்று உளமார உரைக்கின்றார்.

இதைப் போன்றே சமூக முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் திட்டங்களையும், செயல்களையும் மக்களே விரும்பிக் கேட்டபிறகுதான் ஓர் அரசாங்கம் செயல்படவேண்டும் என்பது அறிவுக் கூர்மையான அரசுக்கு அடையாளமல்ல, அரசாங்கத் தலைவர்களே, சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களை, ஆலோசனைகளை, மக்கள் மன்றத்தின் முன்னால்வைத்து அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று சட்டவடிவில் அமுலுக்குக் கொண்டுவரலாம். அதுதான் சிறந்த ஜனநாயகத் தலைமைக்கு உயர்ந்த எடுத்துக்காட்டாகும்.

நாம் இதுவரை நாணயத்தின் ஒரு பக்கத்தைத்தான் பார்த்தோம். ஜனநாயகத்தில் அரசியல் தலைவர்களின் கடமையைப் பார்த்தோம். ஜனநாயகத்தில் ஆளப்படுவோரின் கடமையை எந்த விதத்திலும் ஆளுவோரின் கடமையைவிடக் குறைத்து மதிப்பிட முடியாது. ஜனநாயகம் திறம்பட இயங்க, பயனுள்ள வகையில் பணியாற்ற, அது இருவழிப் பாதையாக இயங்கவேண்டும். இருதிறத்தாரும் (ஆளுவோர் ஆளப்படுவோர்) தங்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை விழிப்போடிருந்து நிறைவேற்ற வேண்டும்.

குடியாட்சியில் குடிமக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆவேசத்துடன் போராடுவதைப் போல, தங்கள் கடமைகளைக் கண்போல் கருதி நிறைவேற்ற வேண்டும். ஜனநாயகத்தில்வாக்காளர்களின்கடமை ஒவ்வொரு தேர்தலிலும் தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு வாக்களிப்பதோடு முடிவடைந்துவிடவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல் ‘‘ஜனநாயகம் வெற்றி பெறவேண்டுமானால் முன்சொன்னபடி நாம் செய்தோமா என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளும் பண்பு ஆளுவோருக்கும், வாக்களித்தபடி ஏன் செய்யவில்லை என்று கேட்கும் விழிப்புணர்வு ஆளப்படுவோருக்கும் இருந்தாக வேண்டும்.’’

வாக்காளர்கள் விழிப்புணர்வு அற்றவர்களாக இருந்தால் ஆளுவோரும் அதிகார போதை ஏறி தவறான பாதையில் செல்ல வழி வகுக்கும். ஜெர்மனியில் மக்கள், இட்லரை ஆட்டு மந்தைகளைப் போல் பின்பற்றிய காரணத்தால், நாளடைவில் அவன் ஜனநாயக இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சர்வல்லமையை படைத்த சர்வாதிகாரியாக உருப்பெற்றான். ஜெர்மனியையே நாசப் படுகுழியில் வீழ்த்தினான்.

ஜனநாயக அமைப்பின் மூலம் நீதியான சமூக அமைப்பை நாம் அடையவேண்டுமானால், வாக்காளர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும். அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஆழ்ந்த கவனம், உற்சாகமான பங்கு, சுயமான சிந்தனையில் மலரும் அச்சமற்ற தீர்ப்பு, எதிரியின் கருத்துக்கு மதிப்பளித்தல், பொது நலனில் நெறுங்கிய ஈடுபாடு, தியாக மனப்பான்மை, இவை ஒவ்வொரு குடிமகனுக்கும் இருந்தாகவேண்டும். அத்தகைய உயர்ந்த பண்புகளைப் படைத்த குடிமகன்தான், இன்று ஸ்விட்ஸர்லாந்து நாட்டை உலக ஜனநாயக நாடுகளுக்கு ஒரு ஒளி விளக்காக, ஒரு வழிகாட்டியாக ஆக்கியுள்ளான்.

ஸ்விட்ஸர்லாந்து நாட்டின் ஜனநாயகத்தைப் பற்றி ஓர் அரசியல் அறிஞர் கீழ்க்கண்டவாறு புகழாரம் சூட்டுகிறார்: ‘‘உலகநாடுகளை எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள். அங்கெல்லாம் நீங்கள் வியத்தகு அரசியல் சாதனைகளைக் காணலாம். ஆனால் ஸ்விட்ஸர்லாந்தைப்போல் அங்கெல்லாம் சுதந்திரமான கருத்தும், நடுநிலையான தீர்ப்பும் கொண்ட நல்ல குடிமக்களைப் பெருமளவில் நீங்கள் சந்திக்க முடியாது; அங்கெல்லாம் பொதுநல ஊழியர்கள் தங்களுக் களிக்கப்பட்ட சிறு துறைகளில் தங்கள் கடமையை திறமையுடனும் பெருமையுடனும் நிறைவேற்றுவதைத் நீங்கள் பார்க்க முடியாது; ஸ்விட்ஸர்லாந்தைப் போல், தங்கள் சக குடிமக்களின் இன்ப துன்பங்களில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள குடிமக்களை நீங்கள் காணமுடியாது.’’

ஜனநாயகம் என்பது வெறும் அரசாங்க அமைப்பு மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை; ஒரு பண்பாடு. சில நாடுகளில் ஜனநாயக அமைப்பு இருந்தும், ஜனநாயகப் பண்பு இல்லாத காரணத்தால் அந்நாடுகளில் (பாகிஸ்தான், இந்தோனேஷியா, கானா போன்றவை) ஜனநாயகம் வெற்றி பெற முடியவில்லை. அங்கெல்லாம் ஜனநாயகம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு, சர்வாதிகாரக் கள்ளி படர்ந்து வருகிறது. ஜனநாயகம் வாழ்வையும் வளத்தையும் கொடுக்க வல்லதைப்போல், தேய்வையும் அழிவையும் கொடுக்கக்கூடியது. சிறு கும்பலின் சர்வாதிகாரம் சுயநலமிகளின் காட்டு தர்பார், சமூகப் பண்பு குறைந்து அழிதல் ஆகியவற்றிற்கும் அது வழி வகுக்கும்.

ஆனால் ஜனநாயக உணர்வோடு கூடிய ஜனநாயக அமைப்பில், தனி மனிதர்களின்சுயசிந்தனைதன்மதிப்பு தன்னம்பிக்கை, பொதுநலம் ஆகியவையும் பேணி வளர்க்கப்படுகிறது. ஆளுவோர் இறுதியில் ஆளப்படுவோர்க்கும் பதில் கூறவேண்டியவர்களாகையால், ஜனநாயகத்தில் அதிகாரம் ஓர் அறக்கட்டளையாகக் (Trust) கருதப்பட்டு, ‘ஒவ்வொருவரும் எல்லோரும் ஒவ்வொருவரின் நன்மைக்காகவும்’’ வாழ்ந்து நாட்டின் பொதுநலம் வளர்க்கப்படுகிறது சமூக அமைதி, உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீதியான புதிய சமுதாயம் மலர்கிறது


**வாய்வு சூரணம்**
மலச்சிககல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

**பூபதி எண்ணெ**
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல, இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம் செய்யவல்லது.
புட்டி ரூ 7—50

**கக்குவான் மருந்து**
முதல் நாளிலேயே கககுவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவலலது.
புட்டி ரூ. 2—00

**வீரகேசரி மாத்திரை**
ஜீவசகதி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

**S V R சன்ஸ் K. I M P வாய்வுசூரணம் டிப்போ**
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

உப ஏஜெண்டு:
அம்ர்தலால் அண கோ., 146, லதனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல ஹால, 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ, வல்லராம நாட ர் அண் சன்ஸ், 188-எ தாராவி ரோடு, பம்பாய்-17,
சொக்கனுதம் செட்டியார், மருந்துக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி,
ஆதமஜோதி நிலயம், நாவலப்பிட்டி, சிலோன்.

# “காவேரி வருகின்ருள்”

சீர்கொண்ட மூவேந்தர்
சேர்ந்து தமிழ்வளர்த்துப்
பார்கொண்டு வாழ்ந்தாண்ட
பண்டைத் திருநாளில்
கார்கொண்டு பொழிநீரும்
கரைவழிய நல்லதொரு
பேர்கொண்ட காவேரிப்
பெண்ணென்னும் பெருந்தகையாள்.

ஆடிப் பெருக்கெடுத்தே
அழகாக வழிநெடுக
ஓடி வரும்போதில்
ஓரூரின் சாலையிலே
கூடிப் பலபேர்கள்
கூறுகின்ற செய்திதனை
நாடிக் கேட்கின்ருள்
நங்கையவள் காவேரி.

அறிஞரெனும் அண்ணுவும்
அவரருமை இளையோரும்
வறியவரின் வாழ்க்கையிலே
வளம்பொங்க வழிவகுத்து
அறிவுடைய பெரியோரின்
அறிவுரையை மனங்கொண்டு
நெறிமுறையின் தமிழகமாம்
நாடாளும் நிலையறிந்தாள்.

முடிசூடித் தமிழன்னை
முகமலர வழிசெய்துப்
படியரிசித் திட்டத்தால்
பாட்டாளிப் பசிபோக்கிக்
குடிவளர நிலவரியைக்
குறைத்துமிக முறைவழங்கி
குடிசையினைக் கல்வீடாய்க்
கொண்டதையுங் கண்டறிந்தாள்,

வேறு

சங்குகொண்டு வெற்றியூதும்
சங்ககால மன்னர்போல்
பங்குகொண்டு ஏழைபடும்
பாடுதீர்க்கும் அண்ணுவின்
தங்குபுகழ் ஆட்சியினைத்
தான்காண நேராகப்
பொங்குதிரைக் காவேரி
புறப்பட்டாள் சென்னைக்கே.

வேறு

குயில்பாடும் சோலைக்குக்
குளிர்நீரைத் தானூட்டி
மயில்போல நடைநடந்து
மான்போல உடல்நெளிந்து
பயில்வாகும் இசையெல்லாம்
பண்ணேடு தாளுெலித்து
ஒயிலோடு தன்னுடலை
ஒப்பனைகள் செய்கின்ருள்.

பாலதிலே தேன்கலந்து
பருகுகின்ற இனிமைபோல்
நூலதிலே சிறந்ததென்ற
நுண்மணிமே கலையணிந்தாள்
காலதிலே சிலம்பணிந்தாள்
கையினிலே வளையணிந்தாள்
கோலமுடைச் செவியதிலே
குண்டலமும் தானணிந்தாள்.

சிங்கார மணிமார்பில்
சிந்தாமணி யணிந்தாள்
அங்கமெலாம் குறள்மறையும்
அணிகூறும் தண்டியதும்
செங்கோல்கொள் முடிமன்னர்
சீர்த்தஉலாப் பாவகையும்
சங்கம்வளர் தமிழ்நூலும்
சரந்தொடுத்துத் தானணிந்தாள்.

எங்கள் காவேரி
எழிலரசி யணிபூண்டுப்
பொங்கு மழகோடுப்
பூத்துப் புதுமையொடு
தங்கும் புகழ்சென்னைத்
தலைநகரைத் தாளுேக்கி
வங்கக் கடலோரம்
வருகின்ருள் வளத்தோடே.

வட்ட நிலா முகத்தழகி
வருகைக்கு வழிகாட்டத்
திட்டமிட்ட அரசியலார்
தீட்டுகின்ற ஆணையினைக்
கெட்டழிந்த உடலோடு
கிடக்கின்ற கூவமெனும்
பட்டணத்துப் பாவையவள்
பலர்கூறக் கேட்டறிந்தாள்

என்னைப்போல் பெண்ணெருத்தி
எழிலோடு வருகின்ருள்
சென்னையிலே வாழ்கின்ரேர்
சிறப்பாகக் கொண்டிடுவார்
கன்னிப்பெண் ணுனுலும்
களங்கமுற்றேன் வாழ்க்கையிலே
பொன்னியவள் திருமுகத்தில்
என்னவென்று நான்விழிப்போன்.

சிந்துகின்ற அழுக்கெல்லாம்
சேர்த்தென்ற னுடலோடு
முந்துகின்ற காற்றதிலே
முகஞ்சுளிக்கும் நாற்றமொடு
வெந்துமனம் நோகின்றேன்
வேதனைகள் படுகின்றேன்.
வந்தமகள் முகத்தெதிரே
வடிவிழந்து நாணுவதோ

கட்டழகிக் காவேரிக்
கன்னியவ ளெதிரிலே
மட்டில்லாத் துயரமொடு
மங்கைநான் நிற்பதுவோ
கெட்டவளா யிருந்தாலும்
கேட்பார்க ளில்லையெனக்
கொட்டிமனங் குமுறுகிருள்
கூவமெனும் பெண்ணுவாள்

கூவமெனும் பெண்ணுளும்
கூவியழுங் குரலதுதான்
நாவலர்கள் போற்றுகின்ற
நமதண்ணு கேட்டறிந்தார்
காவலனுய் நாமிருக்கக்
கன்னியவள் களங்குவதோ
பாவமெனப் பண்போடு
பரிதாபப் படுகின்ருர்.

களங்கத்தைப் போக்குகிறேன்
கண்ணீரைத் துடைக்கின்றேன்
விளங்குகின்ற தமிழகத்தின்
வேற்றுவரா யிருந்தாலும்
உளங்கலங்கி என்முன்னே
உணர்வயர மனங்கொள்ளேன்
வளங்கொண்ட வனப்போடு
வாழும்வகை செய்கின்றேன்.

எனக்கூறி முதலமைச்சர்
ஏந்தலரை யாங்கழைத்து
மனக்கருத்தைக் கூறிநின்ருர்
மற்றவரு மகிழ்வோடு
தனக்குவமை காணுத
தனித்தபெரும் அழகோடு
வனக்கொன்றை மலர்போல
வடிவமைப்பார் கூவத்தை.

தங்கமென உடல்மின்னித்
தளதளக்கு மழகோடு
பங்கமின்றிப் பலர்முன்னே
பாவையவள் நடைநடக்க
அங்கமெலாம் அணிசெய்ய
அரசியலார் ஆணையிட
செங்கமல முகமலர்ந்து
சேயிழையாள் மணமகிழ்ந்தாள்.

நங்கை காவேரி
நீரூட்டி விருந்தளிக்க
அங்கே யவளோடே
ஆரணங்கு கூவமென்பாள்
எங்கள் தமிழ்ப்பாடி
எழில்நடன மாடுதற்கு
பொங்கும் விழவினையே
புகழ்வுடனே தாமெடுத்தார்.

வேழமுடை சேரமன்னன்
விருப்பமொடு பெற்றமகள்
சோழனது மனைபுகுந்து
சோறளிக்கும் செல்வமகள்
கீழநெடுங் கடலோரம்
கிளிமொழியாள் மகிழ்வோடு
வாழவழி யெங்குந்தான்
வளம்பொங்க வந்திடவே!

போரோடு களமெங்கும்
பொலிவாக நெல்லடித்தே
ஏரோடு உழவரெலா
மேத்துகின்ற காவேரி!
சீரோடு சென்னையினைச்
சேர்ந்தாங்கு வாழ்வோர்க்கும்
நீரோடு தமிழுணர்வை
நீயூட்டி வாழியவே!

—வித்துவான் பா. கண்ணையன்.

# இதயத்தில் ஒரு இடம்!

வி. ஆர். மதனகோபால்
எம்.ஏ., பி.காம்.

அரங்கேற்றத்துக்கு இன்னும் ஆறு நாட்கள் இருந்தன. கீதாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அன்றே அரங்கேறி ஆடவேண்டும்போலிருந்தது. இத்தனை நாள் அவள் கற்று வந்த ஆடல்களை, அவளுக்குப் புகழ் பெற்ற நட்டுவனார் நல்லசிவம்பிள்ளை சிறப்புற சொல்லிக்கொடுத்த நடனக்கலை இன்னும் ஆறு நாட்களில் அரங்கேறி அனைவரும் பார்த்து அமோகமாகப் பாராட்டுப் பெறப் போகிறது.

கண் பார்வையற்ற குருடனுக்கு கண்வர அறுவைச் சிகிச்சைசெய்து கட்டுப்போட்ட மருத்துவர் இன்னும் ஆறு நாட்களில் கட்டை அவிழ்த்து விடுவேன், கண்பார்வை கிட்டிவிடும் என்று சொன்னால் எப்படி ஆவலோடும் துடிப்போடும் அந்த ஆறாவதுநாளை அவன்எதிபார்த்துக் காத்திருப்பானோ அதுபோல் ஆவலோடு இருந்தாள் கீதா.

மீதி ஆறு நாட்களை எப்படிக் கழிப்பது என்று எண்ணி அமர்ந்து கொண்டிருந்தாள் கீதா. அவள் கையில் ஏதோ ஒரு புத்தகம் இருந்தது. மனமோ அந்த ஆறாவது நாளைப்பற்றியேஎண்ணிஅசைபோட்டுக்கொண்டிருந்தது.

"என்ன கீதா, தீவிர சிந்தனையிலிருக்கிறாய்?" என்ற குரலைக் கேட்ட கீதா திரும்பிப்பார்த்தாள். வாயிற்படியில் அவள் அத்தான் — மாமன் மகன்—மனோகர் நின்றிருந்தான்.

அந்த நேரத்தில் அவன் வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் முகத்தில் ஏற்பட்ட சுளிப்பை மறைத்துக்கொண்டு "வாங்க" என்று அரை மனத்துடன் அழைத்தாள்.

கணநேரம் தோன்றினாலும் அவள் முகத்தில் ஏற்பட்ட சுளிப்பைக் கவனித்துவிட்ட மனோகர், ஏதும் கவனியாததுபோல் உள் நுழைந்து அமர்ந்தான்.

"உன் நடன அரகேற்றத்தைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தாயா" என்று கேட்டான் மனோகர்.

அவள் அரங்கேற்றத்தைப்பற்றி யார் பேசினாலும் உற்சாகம் பீறிட்டுக்கொண்டு கிளம்பும் கீதாவுக்கு. தன்னை மறந்த அந்த லயிப்பில் ஆழ்ந்து பேசத் தொடங்கி விடுவாள்.

"ஆமாம், இன்னும் ஆறு நாட்களிருக்கின்றன அரங்கேற்றத்துக்கு. அந்த ஆறுநாட்கள் இன்றே முடிந்து விட்டு, என் அரங்கேற்றம் இன்றே நடக்காதா என்று மிகமிக ஆவலாக இருக்கிறேன்" என்றாள் கீதா.

"நான் அறிவேன் கீதா. ஆனால்' அப்படி அவசரப்படாதே. இன்னும் ஆறே நாட்கள்தானே? அது சிட்டெனப் பறந்துவிடும் என்றான் மனோகர்.

கீதா தன் மாமன் மகனை ஏறிட்டு நோக்கினாள். அவன் கருப்பாக இருந்தாலும் களையாக இருந்தான். படித்துவிட்டு நல்ல இடத்தில் உத்யோகம் பார்க்கும் அவன் கீதாவின் பின்னாலேயே சுற்றும் காரணம்? கீதாவுக்குத்தெரியும்! எப்பொழுதோ அவள் தாய் இறக்கும்போது கீதாவை மனோகரன்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று சொன்னாளாம். அதன் பிறகு "கீதா, தனக்கே" என்ற எண்ணத்துடன், பால் உறியைச் சுற்றிவரும் பூனையைப்போல் சுற்றிவருகிறானும் மனோகர். ஆனால், கீதாவோ?

"இன்று நீங்கள் வேலைக்குப்போகவில்லையா" என்று கேட்டாள் கீதா. தன்னைச் சிந்தனையிலிருந்து விடுவித்துக்கொண்டு.

'இல்லை. இன்று கொஞ்சம் ஓர் இடத்துக்கு போகவேண்டிய வேறு வேலை இருந்தது. அதனால் நான் லீவு போட்டேன்" என்று பதில் சொன்னான் மனோகர்.

"இங்கு வருகின்ற பெரிய வேலை போலும்" என்று சொல்லவில்லை, மனத்துக்குள் நினைத்துக்கொண்டாள் கீதா.

"மனோகரனோ, "எத்தனை அழகாக இருக்கின்றாள் கீதா. அந்தக் கதுப்புக் கன்னங்களும் கொவ்வைச் செவ்விதழும், கூரிய கண்களும், கோலமயில் உருவமும், அப்பப்பா, அவை என்னைக் கொல்லாமல் கொல்லுகின்றனவே" என்று எண்ணமிட்டான்.

"கீதா இன்று சாயங்காலம் ஒரு சினிமாவுக்குப் போகலாம் வருகிறாயா?" என்று கேட்டான் மனோகர்.

"சினிமாவுக்கா, உம்......மன்னித்துக்கொள்ளுங்கள். வேறு அவசர வேலை இருக்கிறது, நீங்கள் போங்கள்" என்று சொன்னாள் கீதா.

அதைக் கேட்டதும் மனோகருக்கு முகம் தொங்கிவிட்டது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "முயற்சி செய்து பாரேன் கீதா?" என்று வேண்டுகோளுடன் கூறினான்.

'முடியாது. நான் ஏற்கெனவே வேறு ஒரு இடத்துக்குப் போகப் போவதாக வாக்கு கொடுத்துவிட்டேன். அதனால்தான் வருவதற்கில்லை. சாரி" என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவிட்டாள்.

என்ன செய்வான் மனோகர், மூக்குடைபட்டதினால், தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசுகிறான்; "சரி கீதா சன்னைதான் ஏன் தொந்திரவு செய்யவேண்டும். இன்னொரு நாள் நீ கட்டாயம் என்னோடு சினிமாவுக்கு வரவேண்டும்"

"பார்க்கலாம்,"

"நான் வருகிறேன் கீதா" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் மனோகரன்.

மேற்கொண்டு ஏதும் பேசவில்லை கீதா அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருந்தாலும் தான் இப்படி அவனை முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லி அனுப்பியிருக்கக் கூடாது என்று நினைத்தாள். ஆனாலும், அவன் இப்படி வந்து அவளைத் தொ[illegible] செய்வது அவளுக்குப்பிடி[illegible] ஆகவேதான் அ[illegible] நேரிட்டதுஎன்[illegible] கொண்டாள்.

கீதா மனோக[illegible] செய்து பேசுவது [illegible]

-வையல்ல. பல தடவை அவள் அவனை மூக்குடைத்து அனுப்பியிருக்கிருள். இருந்தும் ஏதோ நைப்பாசையினுல் அவன் அவள் பின்னுள் வளைய வருகிருன்.

"என்னம்மா கீதா, என்ன செய்து கொண்டிருக்கிருய்?" என்று கேட்டபடி வந்தார் அவள் தந்தை தணிகாசலம்.

ஒன்றுமில்லையப்பா நளினு வரேன் என்று சொன்னுள்; இன்னும் காணும் அதுதான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்ருள்.

"உன் மாமன் மனேகர் வந்தானே என்ன சொன்னுன்?'' என்று கேட்டார்."

"என்ன செய்வார் ஏதோ வேறு வேலை இருப்பதினுல் இன்று தன் ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு வந்தாராம் சும்மா பார்த்துட்டுப்போக வந்திருக்கார்,"

"இன்னும் கொஞ்ச நாள்தானே, அதற்கப்புறம் உனக்கும் அவனுக்கும் உன் அம்மாவின் வாக்குப்படி திருமணம் செய்து கொடுத்துவிட்டால் போகிறது. பின்னர் அவன் தினமும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்."

திருமணப் பேச்சை எடுத்ததும் வெறுப்புடன் பேசினுள் கீதா. "அப்பா எனக்கு திருமணமே வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்வது? ஏனப்பா திரும்பத் திரும்ப என் திருமணப் பேச்சை எடுக்கிறீர்கள்?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"எத்தனை நாளைக்குத்தான் நான் உன்னைக் கட்டிக் காப்பேன். என் கண் மூடுவதற்குள் உன்னை ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டால் என் நெஞ்சு நிம்மதியாகவேகும்." என்று வேதனை கலந்த குரலில் சொன்னுர்.

"எவனிடமும் என்னை ஒப்படைக்க வேண்டாம். நான் என்னை கலைக்கு ஒப்படைத்துவிட்டேன். வீணுக என் திருமணத்தைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள் அப்பா" என்ருள்.

"கீதாஎன்மனத்தைப் புண்படுத்துகிருய்? உனக்குநான் ஒருவன்தானே இருக்கிறேன். எனக்கும் இதயம் பலவீனம் என்று டாக்டர்கள் சொல்கிருர்கள். நான் இன்னும் எத்தனை நாள் இருப்பேனு? அதற்குள் உனக்கு ஒரு வழி பண்ணிவிட வேண்டும் என்றுதான் துடிக்கிறேன் அம்மா." என்று வருத்தத்துடன் சொன்னுர் அவள் அப்பா.

"அப்பா. என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் மனத்தைப் புண்படுத்தும்படி பேசிவிட்டேன். வீணுக ஏன் கவலைப்படுகிறீர்கள். அரங்கேற்றம் முடியட்டும். என் முடிவை சொல்கிறேன் இன்னும் ஆறு நாட்கள் தானேப்பா இருக்கின்றன. அதற்குள் நாம் ஒன்றும் செய்துவிட முடியாது இல்லையா அப்பா."

"சரியம்மா. உன் இஷ்டம் அதன் பிறகாவது ஒரு நல்ல முடிவை நீ எனக்குச் சொல்லணும்" என்ருர் தணிகாசலம்.


இப்பொழுது நளினு வந்தாள். அதனுல் கீதா தன் தந்தைக்கு வேறு ஏதும் பதில் சொல்லாமல் பேச்சை மாற்ற முடிந்தது.

"வாடியம்மா, வாடி. ஏன் இத்தனை லேட்? என்று வரவேற்ருள் கீதா.

"என் அத்தானை வழியில் சந்தித்தேன்; அவரிடம் பேசிவிட்டு வர நேரமாகிவிட்டது."

"என்ன அவ்வளவு முக்கியமான விஷயமாம்?"

"ஆமாம் நானை என்னை மணக்கப் போகிறவர் அவர்தானே! அதனுல் அவர் விருப்பப்படி நடக்க



வேண்டியது என் கடமையல்லவா?' என்று சொன்னாள் நளினா.

'பரவாயில்லை வருங்காலக் கணவன்மீது உனக்கு இவ்வளவு கரிசனம்'' என்று கிண்டலாகக் கூறினாள் கீதா.

''இருக்கக்கூடாதா? எல்லாரும் உன்னைப்போல் கலைக்கு அர்ப்பணித்துக் கொள்ளமுடியுமா?'' நளினாவும் கிண்டலுடன் பதில் சொன்னாள்.

''போதும் உன் கிண்டல். நேரமாகிறது. புறப்படலாம்''

''நான் தயார்.''

இருவரும் கிளம்பினர். அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார் தணிகாசலம். எப்பொழுது தான் தன் மகளுக்கு நல்லபுத்தி வருமோ என்று மனம் வெதும்பினர்.

மூன்று நாட்கள் போனதே தெரியவில்லை நாளை எண்ணிக்கொண்டிருந்த கீதாவுக்கு அன்றென்னவோ இருப்பே கொள்ளவில்லை. எப்படியும் இரண்டு நாட்களைக்கழித்துவிட்டாள், அதற்கு அடுத்த நாள் அரங்கேற்றம் அந்த நினைவு அவளுக்கு இனிப்பாக இருந்தது.

கடைத்தெரு வரை போய் வரலாம் என்று நினைத்துக்கொண்டு காரை எடுத்தாள். அந்த பியட் காரை அவள் அப்பா அவருடைய பிறந்தநாள் பரிசாகக் கடந்த ஆண்டு தான் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டுதான் கீதா எங்கும் கிளம்பி விடுவாள்.

அதுபோல் அன்றும் காரை எடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குக் கிளம்பினாள், பாதி தூரம்தான் சென்றிருப்பாள். எதையோ நினைத்துக் கொண்டு சட்டென்று காரைத் திருப்பினாள். பின்னால் வந்து கொண்டு இருந்த லாரியை அவள் கவனிக்கவில்லை, லாரி டிரைவர் பிரேக் போட்டும் அந்த விபத்தைத் தடுக்க முடியவில்லை, மிகப் பெரிய விபத்து.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் தனி வார்டு. கீதா கட்டுகளுடன் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். கீதாவின் கட்டிலைச் சுற்றி கவலையுடன் அவள் தந்தை, மனோகர், நளினா எல்லோரும் நின்றுகொண்டிருக்கின்றனர்.

விபத்தில் கீதாவுக்குப் பலத்த காயங்கள்ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவம் செய்யப்பட்டாள். இன்னும் அவள் கண்விழிக்கவில்லை. அதனால் ஆவலுடன் அவளையே எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

கீதா மெதுவாகக் கண் விழிக்கிறாள். அவள் உடலெல்லாம் வலியாக இருக்கிறது போலும். அதனால் தான் அவள் கண்விழிக்கும்போது இலேசாக முனகுகிறாள். கண் விழித்தவள் சுற்று முற்றும் பார்க்கிறாள். அவள் தந்தை அன்புடன் அவளைப் பார்ப்பதைக் காண்கிறாள். கண் கலங்குகிறாள்.

அதைப் பார்த்த அவள் தந்தை ''அம்மா, கீதா, கீதா, எப்படியம்மா இருக்கிறது?'' என்று பரிவுடன் வினவுகிறார். தந்தையின் அன்பு அவளுக்கு இதமாக இருக்கிறது.

''அப்பா'' என்று அழைக்கிறாள். பின் கண் மூடுகிறாள். மீண்டும் கண்ணைத் திறந்தவள் மற்றவர்களைப் பார்க்கிறாள். நளினாவும் அன்புடன் ''கீதா'' என்கிறாள். அதற்கு அவள் முறுவலிக்கிறாள். பின் தன் அத்தான் மனோகரைப் பார்க்கிறாள். ஏனோ அவளுக்கு அவன்மீது அப்போது கூட இனம் புரியாத ஒருவிதவெறுப் புணர்ச்சி ஏற்படுகிறது. ஆவலுடன் பார்க்கும் அவனை அலட்சியம் செய்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்.

அப்பொழுது நர்ஸ் வந்து, பெரிய டாக்டர் வருவதால் எல்லோரையும் வெளியே போகச் சொல்கிறாள்.

நாட்கள் ஓடுகின்றன. ஆனால் கீதாவுக்கோ அவையெல்லாம் நரக வேதனையான நாட்கள்.

ஜன்னல் அருகில் உட்கார்ந்து இருக்கும் கீதா தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்: அவள் கண்கள் கலங்குகின்றன. கீழே குனிந்து தன் கால்களைப் பார்த்துக்கொள்கிறாள். சுவாதீனமற்று இருக்கும் இடது காலைப் பார்த்ததும் அவளுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. வேதனை இதயத்தை அழுத்துகிறது.

பாழ்! எல்லாமே பாழ்!

அவள் அரங்கேற்றம் நடைபெறவில்லை. அவள் காரில் ஏற்பட்ட விபத்தினால் அவள் கால்களில் ஒன்று சுவாதீனமற்று ''நொண்டி'' யாகிவிட்டாள். ஆம், இன்று எதற்கும் அவள் ஒருவரின் உதவியை நாடி ஓடும்படி ஆகிவிட்டது. அவள் வாழ்க்கையே பாலைவனம் ஆகி விட்டது.

இருள் பரவியது கூடத்தெரியாமல் அமர்ந்திருந்தாள் கீதா. அவள் வாழ்க்கையே இருள் ஆகிவிட்டபின் அவள் சாதாரண இருளைப் பற்றியா கவலைப்படப் போகிறாள். அவளது எண்ணத்தை முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது அப்போது அந்த ஒரே உருவம்தான்! கண்கலங்கியபடி அமர்ந்திருந்த அவளை அந்த உருவத்தின் குரல் இவ்வுலகிற்கு அழைத்து வந்தது.

''என்ன கீதா இருளிலே உட்கார்ந்திருக்கிறாய். விளக்கைக் கூடப் போடாமல்.'' என்று கேட்டபடி வந்தான் மனோகர்.

தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனை ஏறிட்டு நோக்கினாள். ஆமாம்! அவனேதான்! மனோகரனேதான்! இதயத்தில் இடம்பெற்றுக்கொண்டுவிட்ட அந்த

## அதிமேதாவிகள்!

ஆண் — பெண் உறவின்றி எதிர்காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடங்களில் குழந்தைகள் பிறக்கும். அந்தக் குழந்தைகள் ஐன்ஸ்டீனைப் போல் எடிசனைப்போல் உலகு புகழ் விஞ்ஞானிகளாகவும் அறிவு சான்ற பெரியார்களாகவும் வளரும். இந்த நம்பிக்கை விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆண்—பெண் உறவின்றி ஆராய்ச்சிக் கூடங்களில் பிறப்பிக்கப்படும் குழந்தைகள் அற்புத சக்தி பெற்றிருக்கும். சாதாரண மனித அறிவுக்கு அப்பாற்பட்ட அறிவு பெற்று அதிமேதாவிகளாக வளரும் என்று கலிபோர்னியாதொழில் நுட்பக் கழகப் பேராசிரியர் ஜேம்ஸ் பானர் கூறுகிறார். இவர் உயிரியல் நிபுணர். தன்னுடைய நம்பிக்கைக்கு அவர் தாவர இயலிலிருந்து சான்று காட்டுகிறார்.

முருங்கை. ஆடாதோடை ஆகியவைகளின் கிளைகளை வெட்டி வைத்தால் அவைகள் துளிர்க்கும். இதற்கு 'குளோன்' என்பது விஞ்ஞானப் பெயர். இந்த முறைப்படி விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களில் ஆண்–பெண் உறவின்றி அதிமேதாவிக் குழ[illegible] பிறப்பிக்க முடியு[illegible] ஜேம்ஸ்பானர் [illegible]

இந்த முய[illegible] றால் உலகி[illegible] கும் [illegible]

உருவத்துக்கு உயிர் வந்துவிட்டதா என்ன? சுதாரித்துக்கொண்டு பேசினாள்!

"என் வாழ்க்கையே இருளில் அமிழ்ந்துவிட்ட பிறகு இந்த இருளைப்பற்றி என்ன அத்தான்."

"கீதா, அப்படிச் சொல்லாதே."

"நீங்கள் எவ்வளவு சமாதானம் சொன்னாலும் என் வாழ்க்கை பாழாகித்தானேபோய்விட்டது ஒருஊன்றுகோல் இல்லாமல்கூட என்னால் நடக்க முடியாது"

"அப்படிச் சொல்லாதே கீதா· நான் உனக்கு ஊன்றுகோலாக இருக்கிறேன்."

"என்ன அத்தான் சொல்கிறீர்கள்?"

"என்னை மணந்து கொள்கிறாயா கீதா?"

"வேண்டாம் அத்தான். கால் நன்றாக இருந்தபோது உங்களை உதாசீனப்படுத்தினேன். அலட்சியமாகப் பேசினேன். அதன் பலனை இன்று உணர்கிறேன்; ஆனால் அன்பின் ஆழத்தைக் காண்கிறேன். இன்று நான் ஊனம் நிறைந்தவள். இந்த நிலையில் என்னை உங்களுக்கு நான் அளிக்கக்கூடாது"

"கீதா, வீணாக நீ எதைஎதையோ நினைத்துகொள்கிறாய். நீ எப்படியிருந்தாலும் உன்னை மணந்திருப்பேன் கீதா. மறைந்துவிட்ட உன் தாயும், உன் நிலை கண்டு அதிர்ச்சியால் இறந்துவிட்ட உன் தந்தையும் உன்னைக் கைவிடக்கூடாது என்று என்னைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அதற்காகத்தான் நான் உன்னை அன்றும் இன்றும் மணக்க விரும்புவது. உன் உடல் மீதோ—நீ தரும் இன்பத்தின்மீதோ நான் 'வெறி' கொண்டிருக்கவில்லை—இன்றுகூட. கீதா, நான் உனக்கு வாழ்வளிக்க வேண்டும். மறுக்காதே கீதா!"

"அத்தான்!

"ஆம், கீதா. என்றும் நான் உன் அருமை அத்தானாகவே இருக்க விரும்புகிறேன்."

"என்னை மன்னித்துவிடுங்கள் அத்தான்." என்று சொல்லியவாறே ...ளில் வீழ்ந்தாள்.

அவன் கால... ...டிப்போன அந்த அவளது ...வுக்கு ஓர் இடம் இதயத்தில் அ... கிடைத்தேவிட்ட...

★

## அழுவார் உண்டா?

புலவர். மணிமுடிச் சோழன்

சென்றஇடம் எல்லாமே சிறப்பளிக்கும்
சிறந்ததொரு கல்வியினைப் பெற்றும், கால்கள்
அன்னியனின் மண்ணெல்லாம் அளந்த றிந்தும்,
அவன் பிறந்த தாய்நாட்டில் வளர்ந்த வீட்டில்
தன்கால்கள் படுகின்ற போது; நெஞ்சில்
தணல்பறக்கும் உணர்வற்று, கண்ணீர்ப் பூக்கும்
பொன்மலரைச் சிந்தாத மனித னெல்லாம்
பிணமனிதன்! நடமாடும் உயிரின் கூடே!

எண்ணம்போல் அளவில்லாச் செல்வம், பட்டம்
எத்தனையோ அத்தனையின் ஏற்றத் தோடு
விண்முட்டி உயருகின்ற புகழைப் பெற்று
வளர்ந்தாலும் தன்னலத்துக் காக வாழும்
தண்ணீரின் கூட்டுடலின் மனிதன் தன்னை
தலைவணங்கிப் பாடுகின்ற புலவ ருண்டா?
தண்ணீரில் எழுத்தாகும் அவன்தன் வாழ்க்கை!
தரைக்குணவாய்ப் போகிவிடும் எலும்புக்கூடு!

மலைமுகட்டில் உருட்டிவிட்ட கல்லைப்போல
மதிப்போடு வாழ்ந்திருந்த பெருமை போகும்!
இலைஉதிர்ந்த மரமாகி, பட்டுப் போகும்
இறப்புநிலை கடைசிநிலைச் சூழ்ந்தே நிற்கும்!
தலையிருந்து விழுந்துவிட்ட மயிரைப் போல
தாய்நாட்டுப் பற்றில்லான் இறக்கும் போது
இலைபொறுக்கும் நாய்கூடத் திரும்பிப் பாரா
திழிந்தநிலை அடைந்திடுவான்! அழுவோர் உண்டா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

இங்கொன்றுமாக எத்தனையோ நரைமுடிகள் இருந்தன.

அப்படியென்றால்...!

"நீ ஒரு கிழவன்"

"உனக்கு வயதாகி விட்டது"

எதன் மீதாவது ஓங்கிக் குத்த வேண்டும் போல் இருந்தது. கண்ணாடியைச் சுக்கல் நூறாக உடைத்தெறியத் துடித்தது அவர் நெஞ்சம்,

"எனக்கா வயதாகி விட்டது" நெஞ்சம் அலறியது!

"பின்னென்ன? சிங்கப்பூரிலே திருமண வயதில் ஒருமகள் இருப்பது நினைவில்லையா? அவளுக்கு ஒரு அண்ணன் இருப்பதை மறந்தா விட்டாய்? மாப்பிள்ளை வரவேண்டிய வயதல்லா உனக்கு! நீயா மாப்பிள்ளை ஆகத் துடிக்கிறாய்?"

"வாழ்வின் எல்லையைக் கண்டவனே! வாழ்வின் தொடக்கத்தைக் காணவா துடிக்கிறாய். முடியுமா? உதிர்ந்த சருகு தளிராக முடியுமா? இதுகூடவா தெரியவில்லை உனக்கு"

"முதுமையை மறைக்க ஏனப்பா முயலுகிறாய்? வாழ்வின் முதிர்ச்சியே வயதில்தானே இருக்கிறது; அந்த வயதை ஏனப்பா குறைக்கிறாய்"

"மொட்டு மலரும், மலர் பிஞ்சாகும்; பிஞ்சு காயாகும்; காய் கனியாகும். கனி மலராக முடியுமா? நீயும் கனிதானே!"

விநாயகமூர்த்தியின் மனசாட்சி குத்திக் காட்டி, குருட்டு விழிகளைத் திறக்க முயன்றது.

ஒவ்வொரு நரைமுடியும் விநாயகமூர்த்தியைப் பார்த்து சிரித்தன.

ஆயிரம் சாத்திரங்களும், வேதங்களும் உணர்த்த முடியாத ஒரு உண்மையை அந்தக் கணநேரம் நரைத்த முடி ஒரு கனத்தில் உணர்த்தி விட்டது.

'சீச்சீ! என்ன தவறைச் செய்ய இருந்தோம்' விநாயகமூர்த்தியை மூடியிருந்த திரை விலகியது என்பதை இவ்வார்த்தைகள் காட்டின.

வேட்டியை அணிந்து கொண்டு, எப்போதோ தைத்து வைத்திருந்த ஒரு ஜிப்பாவைப் போட்டுக் கொண்டார்.

கண்ணாடியில் ஒருமுறை பார்த்தார். வயதுக்கேற்ற ஒரு பெருந்தன்மை, ஒரு அழகு பிரதிபலிப்பதைக் கண்டார்.

நீண்ட ஒரு துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே புறப்பட்ட விநாயகமூர்த்தியின் நெஞ்சில் தன் மகளுக்கேற்ற மாப்பிள்ளையைப் பற்றி நினைவுதான் இருந்தது.

மறுபிறவி எடுத்த அவர் மனதில், மறுமணம் பற்றிய நினைவே இல்லை.

அதோ, நிமிர்ந்து நடக்கும் விநாயகமூர்த்தியைக்கண்டு அந்தத் தெருபொருள் புரியாமல்திகைத்தது!

ஆசிரியர், ...ர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்–3
86, திரு... தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.